# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 8,130 — 1935 ம் ஸ்ரீ ஆனிமீ 21 ந் திகதி, வெள்ளிக்கிழமை.


## Part IV.—நான்காம் பாகம்.

### அரசாட்சியாரின் விளம்பரங்கள்.

### 1920 ம் ஆண்டின் 1 ம் இலக்க வித்தியாபரிபாலன கட்டளைச் சட்டம்.

1920 ம் ஆண்டின் 1 ம் இலக்க வித்தியாபரிபாலன கட்டளைச்சட்டத்தின் 25 (1) ம் பிரிவின்படி சிலாப அரசிறைவருமானப் பிரிவுக்குரிய வித்தியா பரிபாலன சபையாரால் செய்யப்பட்டு வித்தியாசங்கத்தின் அங்கீகாரம் பெற்று ஒழுங்குச்சட்டத்தின் 25 (5) ம் பிரிவின்படியும் 1931 ம் ஆண்டின் இலங்கை மந்திர ஆலோசனைச்சபைச் சட்டத்தின் 93 ம் பிரிவிற் குறித்துள்ள அதிகாரப்படியும் உத்தமஞர் தேசாதிபதி அவர்களால் உறுதிப்படுத்தப்பட்ட உபவிதிகள்.

சீ. டபுள்யு. டபுள்யு. கன்னங்கரா,
வித்தியா மந்திரி.

வித்தியா மந்திரி கந்தோர்.
கொழும்பு, 1935 ம் ஸ்ரீ ஜூன்மீ 13 ந் உ.

### உபவிதிகள்.

1. (1) சபையின் ஓர் சாதாரணமான கூட்டம், அக்கூட்டம் நடைபெறுதற்கென நியமிக்கப்பட்ட திகதிக்கு முன்னர் ஒரு கிழமைக்குக் குறையாமல், அக்கூட்டம் போதிய அலுவல்கள் இல்லாததால் நடைபெறாமல் அல்லது அறிவித்தலில் கொடுக்கப்பட்ட வேறு திகதியில் நடைபெறுமென தலைவரால் அங்கத்தவர்கட்கு எழுத்துமூலம் அறிவித்தாலன்றி பெப்ரவரி, ஏப்பிரல், ஜூன், ஆகஸ்டு, ஒக்டோபர், டிசெம்பர் மாசங்களில் மூன்றாந் திங்கட்கிழமை நடைபெறும்.

(2) தலைவர் நடத்தவேண்டிய அலுவல்களின் தன்மையைக்குறித்து எழுத்துமூலம் அறிவித்தல் கொடுத்து ஓர் விசேஷ கூட்டத்தைக் கூட்டலாம். ஆனால் அவ்வித அறிவித்தல் இக்கூட்டம் நடைபெறுவதற்கென நியமிக்கப்பட்ட திகதிக்குமுன்னர் ஒரு கிழமைக்குக் குறையாமல் அங்கத்தவர்கட்கு அனுப்பப்படவேண்டும்.

(3) தலைவர் ஒவ்வொரு கூட்டத்தின் நடவடிக்கைகளையும் அவைகள் நடந்த வரிசைப்படியே ஓர் குறிப்புப் புத்தகத்தில் வரைவர். அக்கூட்டத்திற்குப் பின்னா கூடிய கெதியில் நடவடிக்கைக் குறிப்புகளின் பிரதியை ஒவ்வொரு அங்கத்தவர்கட்கும் அனுப்புவிப்பர்.

2. (1) சிலாப நகர பரிபாலன சங்கத்தின் அதிகாரத்திற்குட்பட்ட இடமுட்பட சிலாப வித்தியா பரிபாலன சங்கத்தின் முழுப்பகுதியும் வித்தியா பகுதியாரால் அங்கீகரிக்கப்பட்ட பாடசாலைகள் மூலமாய் பிரதம கல்விக்காகத் தகுந்த ஒழுங்குசெய்யப்பட்ட பகுதியாமென இத்தால் பிரசித்தப்படுத்தப்படுகின்றது.

(2) இவ்வுபவிதிகளின்படி "பாடசாலை" யென்னும்பதம் வித்தியா பகுதியாரால் அங்கீகரிக்கப்பட்ட அல்லது இனிமேல் அங்கீகரிக்கப்படும் இப்பிரிவிலுள்ள பாடசாலைகளில் எந்தப் பாடசாலையையும் கருதும்.

(3) இவ் வித்தியாபரிபாலனப் பிரிவிற்குள—

(a) ஆறு வயசுக்குக் குறையாததும் பதினாலு வயசுக்குக் கூடாததுமான ஒவ்வொரு சிறுவனின் பெற்றோரும்;

(b) ஆறு வயசுக்குக் குறையாததும் பன்னிரண்டு வயசுக்குக் கூடாததுமான ஒவ்வொரு சிறுமியின் பெற்றோரும்; அச்சிறுவன் அல்லது சிறுமியின் கல்விக்காகப் போதியதும் தகுந்ததுமான வேறு ஒழுங்கு செய்திருந்தாலொழிய; அல்லது இச்சபைத்தலைவர், அச்சிறுவனை அல்லது அச்சிறுமியை வறுமை அல்லது நோய்காரணமாக பாடசாலைக்குப் போவதிலிருந்து நீக்கினாலொழிய அச்சிறுவனை அல்லது அச்சிறுமியை பாடசாலைக்குப் போகச்செய்விப்பது அப்பெற்றோரின் கடமையாகும்.

ஆயின்,

(a) பத்து வயசுக்கு மேற்படாத முஸ்லிம், தமிழ் சிறுமிகள், அல்லது

(b) ஒழுங்குச் சட்டத்தில விதிக்கப்பட்ட ஐந்தாம் வகுப்புப் பரீட்சையில் வாசினை, எழுத்து, கணிதம என்பவற்றில் சித்திபெற்றதாக வித்தியாதரிசியின் பத்திரம் வைத்திருந்து தலைவரின் திருப்திக்குப் பிரயோசனமான தொழிலில் அமர்ந்துள்ள பதினாலு வயசுக்குக் கீழ்ப்பட்ட எந்தச் சிறுவனும் அல்லது பன்னிரண்டு வயசுக்குக் கீழ்ப்பட்ட எந்தச் சிறுமியும்; அல்லது

(c) எட்டு வயசுக்குக்கீழான எந்தச் சிறுவனாவது அல்லது எந்தச் சிறுமியாவது தனது வீட்டில் அல்லது வாசஸ்தலத்திலிருந்து அதிகம் கிட்டிய பாதையால் இரண்டு கட்டை தூரத்திற்கப்பாலுள்ள எந்த பாடசாலைக்காவது, போகவேண்டுமென்ற கட்டாயமில்லை.

3. (1) இவ்வுபவிதிகளின் பொருட்டு எந்தப் பிள்ளையினதும் நாளாந்த வரவுக்காலம் சமான வயசுள்ள பிள்ளைகளின் படிப்புக்காகப் பாடசாலை நாளாந்தம் திறந்திருக்கும் முழுநேரமாகும்; என்றாலும் 15 (2) ம் பிரிவில் ஏற்படுத்திய படி சமய பாடம் படிப்பிக்கும் நேரத்தில் எந்தப் பிள்ளையாவது வராமல் விடலாம்.

4. இவ்வுபவிதிகளின் உட்பிரிவுகளை அனுசரிககத் தவறும் எந்தப் பெற்றோரும் 5 ரூபாவுக்கு மேற்படாத தெண்டமிறுத்தறகும் தொடர்ச்சியான குற்றமாகில் இரண்டாம் நாளுக்கும் குற்றம் தொடரும் பின்னருள்ள நாள் ஒவ்வொன்றிற்கும் 1 ரூபாவுக்கு மேற்படாத குற்றத்திற்குமாளாவர்.

---

## 1920 ம் ஆண்டின் 1 ம் இலக்க வித்தியாபரிபாலன கட்டளைச் சட்டம்.

1920 ம் ஆண்டின் 1 ம் இலக்க வித்தியாபரிபாலன கட்டளைச்சட்டத்தின் 25 (1) ம் பிரிவின்படி புத்தள அரசிறைவருமானப்பிரிவுககுரிய வித்தியா பரிபாலன சபையாரால் செய்யப்பட்டு வித்தியாசங்கத்தின் அங்கீகாரம் பெறறு ஒழுங்குச் சட்டத்தின் 25 (5) ம் பிரிவின்படியும் 1931 ம் ஆண்டின் இலங்கை மந்திர ஆலோசனைச் சபைச் சட்டத்தின் 93 ம் பிரிவிற் குறித்துள்ள அதிகாரப்படியும் உத்தமஶ்ரீ தேசாதிபதி அவர்களால் உறுதிப்படுத்தப்பட்ட உபவிதிகள்.

சீ. டபிள்யு. டபிள்யு. கன்னங்கரா,
வித்தியா மந்திரி.

வித்தியா மந்திரி கந்தோர்,
கொழும்பு, 1935 ம் ௵ ஜூன்மீ 13 ௳.

### உபவிதிகள்.

1. (1) சபையின் ஓர் சாதாரணமான கூட்டம், அக்கூட்டம் நடைபெறுதற்கென நியமிககப்பட்ட திகதிக்கு முன்னர் ஒரு கிழமைக்குக் குறையாமல், அக்கூட்டம் போதிய அலுவலகள் இல்லாததால் நடைபெறுமல் அல்லது அறிவித்தலில் கொடுககப்பட்ட வேறு திகதியில் நடைபெறுமென தலைவரால் அங்கத்தவர்கட்கு எழுத்துமூலம் அறிவித்தாலன்றி, பெப்ரவரி, ஏப்பிரல, ஜூன ஆகஸ்ட்டு ஒகரோபர், டிசெம்பர் மாசங்களில் மூன்றாந் திங்கட்கிழமை நடைபெறும்.

(2) தலைவர் நடத்தவேண்டிய அலுவல்களின் தன்மையைககுறித்து எழுத்துமூலம் அறிவித்தல் கொடுத்து ஓர் விசேஷ கூட்டத்தைக் கூட்டலாம். ஆனல் அவ்வித அறிவித்தல் இக்கூட்டம் நடைபெறுவதற்கென நியமிக்கப்பட்ட திகதிக்கு முன்னர் ஒரு கிழமைக்குக் குறையாமல் அங்கத்தவர்கட்கு அனுப்பப்படவேண்டும்.

(3) தலைவர் ஒவ்வொரு கூட்டத்தின் நடவடிக்கைகளையும் அவைகள் நடந்த வரிசைப்படியே ஓர் குறிப்புப் புத்தகத்தில் வரைவர். அக்கூட்டத்திறகுப் பின்னர் கூடிய கெதியில் நடவடிகளைக் குறிப்புகளின் பிரதியை ஒவ்வொரு அங்கத்தவர்கட்கும் அனுப்புவிப்பர்.

2. (1) புத்தள நகரபரிபாலன சங்கத்தின் அதிகாரத்திற்குட்பட்ட இடமுட்பட புத்தள வித்தியா பரிபாலன சங்கத்தின் முழுப்பகுதியும் வித்தியா பகுதியாரால் அங்கீகரிக்கப்பட்ட பாடசாலைகள் மூலமாய் பிரதம கல்விக்காகத் தகுந்த ஒழுங்கு செய்யப்பட்ட பகுதியாமென இத்தால் பிரசித்தப்படுத்தப்படுகின்றது.

(2) இவ்வுபவிதிகளின்படி "பாடசாலை" யென்னும் பதம் வித்தியா பகுதியாரால் அங்கீகரிக்கப்பட்ட அல்லது இனிமேல் அங்கீகரிசப்படும் இப்பிரிவிலுள்ள பாடசாலைகளில் எந்தப் பாடசாலையையும் கருதும்.

(3) இவ்வித்தியாபரிபாலனப்பிரிவிற்குள்—

(a) ஆறு வயசககுக் குறையாததும் பதினலு வயசுக்குக் கூடாததுமான ஒவ்வொரு சிறுவனின் பெற்றோரும்;

(b) ஆறுவயசுக்குக் குறையாததும் பன்னிரண்டு வயசுக்குக் கூடாததுமான ஒவ்வொரு சிறுமியின் பெற்றோரும்; அச்சிறுவன் அல்லது சிறுமியின் கல்விக்காகப் போதியதும் தகுந்ததுமான வேறு ஒழுங்கு செய்திருநதாலொழிய, அல்லது இச்சபைத் தலைவர் அச்சிறுவனை அல்லது அச்சிறுமியை வறுமை அல்லது நோய் காரணமாக பாடசாலைக்குப் போவதிலிருந்து நீக்கினலொழிய அச்சிறுவனை அல்லது அச்சிறுமியைப் பாடசாலைக்குப் போகச்செய்விப்பது அப்பெற்றோரின் கடமையாகும்.

ஆயின்—

(a) பத்து வயசுக்கு மேற்படாத முஸ்லீம் தமிழ் சிறுமிகள் அலலது,

(b) ஒழுங்குச் சட்டத்தில் விதிக்கப்பட்ட ஐந்தாம் வகுப்புப் பரீட்சையில் வாசிகனை, எழுத்து, கணிதம் என்பவற்றில் சித்திபெற்றதாக வித்தியாதரிசியின் பத்திரம் வைத்திருந்து தலைவரின் திருப்திக்குப் பிரயோசனமான தொழிலில் அமர்ந்துள்ள பதினலு வயசுக்குக் கீழ்ப்பட்ட எந்தச் சிறுவனும் அல்லது பன்னிரண்டு வயசுக்குக் கீழ்ப்பட்ட எந்தச் சிறுமியும், அல்லது

(c) எட்டு வயசுக்குக்கீழான எந்தச் சிறுவனவது அல்லது எந்தச் சிறுமியாவது தனது வீட்டில் அல்லது வாசஸ்தலத்திலிருந்து அதிகம்கிட்டிய பாதையால் இரண்டு கட்டை தூரத்திற்கப்பாலுள்ள எந்தப் பாடசாலைக்காவது போகவேண்டுமென்ற கட்டாயமில்லை.

3. (1) இவ்வுபவிதிகளின்பொருட்டு, எந்தப் பிள்ளையினதும் நாளாந்த வரவுக்காலம் சமான வயசுள்ள பிள்ளைகளின் படிப்புககாகப் பாடசாலை நாளாநதம் திறந்திருக்கும் முழுநேரமாகும்; எனறாலும் 15 (2) ம் பிரிவில் ஏறபடுத்திய படி சமயபாடம் படிப்பிககும் நேரத்தில் எந்தப் பிள்ளையாவது வராமல் விடலாம்.

4. இவ்வுபவிதிகளின் உட்பிரிவுகளை அனுசரிக்கத் தவறும் எநதப் பெற்றோரும் 5 ரூபாவுககு மேறபடாத தெண்டமிறுத்தறகும் தொடர்ச்சியான குறறமாகில் இரண்டாம் நாளுககும் குற்றம் தொடரும் பின்னருள்ள நாள் ஒவ்வொன்றிற்கும் 1 ரூபாவுக்கு மேற்படாத குறறத்திற்குமாளாவர்.

---

## 1896 ம் ஆண்டின் 13 ம் இலக்க ஸ்தல யாத்திரையைப் பற்றிய சட்டம்.

1935 ம் ஆண்டு சந்தான நாயகியின், ஆடி திருவிழாவுக்கு வழக்கமான யாத்திரையை நோக்கி, உத்தம தேசாதிபதியவர்கள் 1931 ம் ஆண்டின் இலங்கைச் (இராச்சிய மந்திரிசபை) சபையின் கட்டளையின் 93 ம் பிரிவினது அதிகாரங்களைக்கொண்டு 1897 ம் ஆண்டின் 7 ம் இலக்கச் சட்டத்தினற் திருத்தப்பட்ட 1896 ம் ஆண்டின் 13 ம் இலக்கச் சட்டத்தின் 1 ம்பிரிவின் பிரகாரம் செய்த பிரமாணங்கள்.

ஜீ. சீ. எஸ். கொறயா,
எக்டிங் சுயகாரிய மந்திரி.

சுயகாரிய மந்திரி கந்தோர்,
கொழும்பு, 1935 ம் ௵ ஜூன்மீ 11 ௳.

### மேற்குறித்த ஒழுக்க விதிகள்.

1. இந்த விதிகளில் "வாடியின் இடப்பரப்பு என்ற வசனம் கீழே கூறப்படும் டாப்பில் விவரித்திருக்கும் எல்லைகளுக்குள் ளடங்கிய விசாலத்தைக் கருதும்."

"உதவி அரசாட்சி ஏசன்றர்" என்பது புத்தளஞ் சிலாபம் டிஸ்திறிக்குகளின் உதவி அரசாட்சி ஏசன்றரைக் குறிக்கும்.

2. உதவி அரசாட்சி ஏசன்றரின் விசேடமான அல்லது பொதுவான கட்டளையின்படி வாடி வீடு கட்டக்கூடாதென்று விலக்கி வைக்கப்பட்ட வாடியின் இடப்பரப்புககுள் உள்ள எந்த இடத்திலும் ஒருவரும் வாடிவீடு கட்டப்படாது.

3. உதவி அரசாட்சி ஏசன்றரினல் அல்லது அவரின் அனுமதியுடன் அதற்காக அமைக்கப்பட்ட இடங்களிற் தவிர வாடியின் இடப்பரப்புக்குள் உள்ள வேறு இடங்களில் ஒருவரும் மலஞ்சலங் கழிக்கப்படாது.

4. உதவி அரசாட்சி ஏசன்றரால் அல்லது அவரின் அனுமதியுடன் குப்பை போடுவதற்காக அமைத்து வைக்கப்பட்ட இடத்தில் அல்லது பாத்திரத்தில் ஒழிய, வாடியின் இடப்பரப்புக்குள் உள்ள வேறொரு இடத்திலும் ஒருவரும், தண்ணீர்ப்பதார்த்தமான அல்லது கட்டிப்பதார்த்தமான கழிவு எதையும் அல்லது வேறெவ்விதமான குப்பையையும் போடப்படாது.

5. (a) அடிக்கப்படும்படி அங்கே கொண்டுவரப்பட்டவைகளும் உதவி அரசாட்சி ஏசன்றரின் விசேடமான அல்லது பொதுவான கட்டளைப்படி அவ்விடப்பரப்புக்குள் வைத்துக்கொள்ள இடங் கொடுக்கப்பட்டவைகளுமான ஆடு மாடுகளைத் தவிர வேறு ஆடு மாடுகளை வாடியின் இடப்பரப்புக்குள் ஒருவரும் வைத்திருக்கப்படாது.

(b) உதவி அரசாட்சி ஏசன்றரால ஒரு மாட்டுக்காலையாக விசேஷமாய் நியமிக்கப்பட்ட அல்லது அப்படிப் பாவிக்கலாமென்று உத்தரவு கொடுக்கப்பட்ட ஓர் இடத்திற் தவிர மற்றப்படிக்கு வாடியின் இடப்பரப்பின் சமீபத்தில் ஆடு மாடுகளை வைத்திருக்கப்படாது.

(c) அவ்வாடுமாடுகளைத் தன் பொறுப்பில் வைத்திருப்பவன் சாணம் முதலியவற்றை அதற்கென்று நியமிக்கப்பட்ட அதிசமீபத்திலுள்ள இடத்தில் போடுவிக்க வேண்டும். மேலும் அவன் தன்னுடைய ஆடு மாடுகள் நிற்குமிடத்தை எப்பொழுதுந் துப்பரவாய் வைத்திருக்க வேண்டும்.

6. வாடியின் இடப்பரப்புக்குள்விற்கப்படும் எல்லாவிதச் சாப்பாடுகளும் ஈ இலையான் விழாமலும் தூசி படியாமலும் இருக்கும்படி (a) சுத்தமான கடுதாசியால் அல்லது சீலையால மூடிவைக்கப்படல் வேண்டும் அல்லது (b) கண்ணடிப் பெட்டிகளுக்குள் வைக்கப்படல் வேண்டும் அல்லது (c) வைத்திய உத்தியோகஸ்தரால் அல்லது வாடிவீட்டு இடப்பரப்பின் பொறுப்பேற்றிருக்கும் சுகாதார உத்தியோகஸ்தரால் அனுமதிக்கப்பட்ட வேறு எவ்விதமான மூடிப்பெட்டிகளுக்குள்ளும் வைத்திருககப்படல் வேண்டும்.

7. வாடியின் இடப்பரப்பின் சுத்தத்துக்குக் கேடு வருவிக்கத்தக்க ஆட்களுக்கும், தொத்துவியாதியுள்ள ஆட்களுக்கும் வாடியின் இடப்பரப்புக்குட் போகிறதற்கு உத்தரவு கொடுக்கப்படாது.

8. வாடியின் இடப்பரப்புக்குள் திருவிழா நாட்களில் ஏதுங் கொள்ளைநோய் உண்டாகக் கண்டால், உதவி அரசாட்சி ஏசன்றர், ஸ்தல யாத்திரைக்காரரை, யாத்திரை ஸ்தலத்தை விட்டுப் போகும்படி செய்தும், அவர்கள் அங்கிருந்து எப் பாதைகளாலும் எவ்விதமாயும் போகவேண்டுமென்றும் விதிககலாம்.

9. (a) வாடியின் இடப்பரப்புக்குள் இருக்கும் தொத்து வியாதியுள்ள ஒவ்வொருவனும் அல்லது (b) அப்படிப்பட்ட வியாதியால் வருந்துகிறவனுடன் அவனுக்கு அவ்வியாதி உண்டென அறிந்துகொண்டு வசிக்கிற ஒவ்வொருவனும் அந்தச் சங்கதியை டாக்குத்தருக் கல்லது சுகாதார உத்தியோகஸ்தருக்கு அறிவிக்க வேண்டும்

10 வாடியின் இடப்பரப்புக்குள் உள்ள ஒரு குளத்தையல்லது கிணற்றை ஒரு குறிககப்பட்ட நோக்கத்துக்கென்று புறம்பாக வைத்து அதைக்குறித்து ஒரு விளம்பரம் அவ்விடத்தில் வெளியாக வைக்கப்பட்டிருந்தால் அக்குளத்தையல்லது அக்கிணற்றை அது புறம்பாக வைக்கப்பட்ட நோக்கத்துக்கே அன்றி வேறெந்த நோக்கத்துக்கேனும் ஒருவரும் உபயோகிக்கப்படாது.

11. உதவி அரசாட்சி ஏசன்றரிடமிருந்து அனுமதிச் சீட்டு அதாவது லைசென்ஸ் ஏற்கனவே பெற்றுக்கொள்ளாமல் ஒருவராகிலும் பாண்போறனை, சோடாமோள் அல்லது காலைகள் வாடியின் இடப்பரப்புக்குள் வைக்கப்படாது. அவ் லைசென்ஸ் செலவின்றிக் கொடுக்கப்படும்.

12. உதவி அரசாட்சி ஏசன்றரிடமிருந்து அனுமதிச் சீட்டு அதாவது லைசென்ஸ் ஏற்கனவே பெற்றுக்கொள்ளாமல் ஒருவராகிலும் கொட்டில் கட்டவும், வாடியின் இடப்பரப்புக்குள் இருக்கும் பிரதான அல்லது மறைவுறய தெருக்களின் எல்லைககுட் செல்லக் கூடியதாய் எக்கட்டடத்தைப் பெருப்பிக்கவும்படாது.

13. உதவி அரசாட்சி ஏசன்றரிடமிருந்து ஏற்கனவே அனுமதிச் சீட்டு அல்லது லைசென்ஸ் பெருமல் ஒருவராகிலும் வாடியின் இடப்பரப்புககுள் அல்லது அவ்விடப்பரப்பின் எல்லையிலிருந்து ஒரு மைல் தூரத்துக்குள் உள்ள இடத்துககுள் எவ்வித துப்பாக்கி சுடவேனும் வாணங்கள் விடவேனும்படாது.

14. உதவி அரசாட்சி ஏசன்றரின் அனுமதியுடன் அமைத்திருக்கும் இடத்தில் தவிர வேறு ஒரு இடத்திலும் வாடியின் இடப்பரப்புக்குள் ஒருவராகிலும் ஆடுமாடுகள் அடிக்கப்படாது. அப்படி அமைத்திருக்கு மிடங்களில் ஆடுமாடு அடிப்போர் அவ்விடத்தைத் துப்பரவாய் வைத்திருக்க உத்தரவாதமுடையவர்களாயிருத்தல் வேண்டும்.

இடாப்பு.

தலைவில்லுவாடி இடப்பரப்பின் எல்லைகள்.

வடக்கு: தலைவில்லு ஓடை;

தெற்கு: ஏத்தால தலைவில்லும், தேலிக்குடா தலைவில்லும் அடிப்பாதைகள் எறும்புக்குடலில் வந்து சேருஞ் சந்தியிலிருந்து நேர்மேற்குப் புறமாகக் கடலுக்குப்போகும் அடிப்பாதை;

கிழக்கு: பண்டாரம் கருக்குவச்சாம் பெரியதோட்டம் வழிகள்:

மேற்கு: கடல்.

---

## அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கொழும்பு லபுகம லெவல் ரேூட்டுச் சந்திப்பில் முடிக்குரிய அல்லாத காணிகளில்கூட இருக்கும் காணிகளை எடுத்தற்கு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது:—

பிரதமபடத்து A 263. கிராமம்—நாவின்ன.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | ரேூட்டு | ரேூட்டின் பகுதி | கொழும்பு கொம்மேஷல் கொம்பனி, லிமிற்றட் | 0 | 0 | 28 |
| 2 | கான் | கட்டிய கான் | ஷை | 0 | 0 | 0·3 |
| 3 | ரேூட்டு | ரேூட்டின் பகுதி | ஷை | 0 | 0 | 1·5 |
| 4 | ரேூட்டு | ஷை | ஷை | 0 | 0 | 12 |

பிரதமபடம் A 264. கிராமம்—பன்னிப்பிற்றிய.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | ரேூட்டு | ரேூட்டின் பகுதி | மிஸ்றர். ஏ. சி. அபேவர்தன, பன்னிப்பிற்றிய | 0 | 0 | 2·6 |

பிரதமபடம் A 478. கிராமம்—வற்றறெக்கவும் கலகெதறவும்.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | ரேூட்டு | ரேூட்டின் பகுதி | கே. அடோனிஸ் அப்பு, கே. லீவிஸ் அப்பு, கே. கரேூவிஸ் குணவர்த்தன, எல். ஜோன் சிங்கோ, எம். சமனேதிஸ், எல்லோரும் வற்றறெக்க | 0 | 0 | 2·3 |
| 2 | ரேூட்டு | ஷை | ஷை | 0 | 0 | 9 |
| 3 | ரேூட்டு | ஷை | ஷை | 0 | 0 | 3·3 |
| 4 | ரேூட்டு | ஷை | ஜீ. சின்னப்பு, ஜீ. டேவித் அப்பு, ஜீ. பிறம்பி அப்பு, ஜீ. கதிறிணுகாமி, இன்னும் அனேகம் பேரும் எல்லோரும் கலகெதற | 0 | 0 | 17·1 |
| 5 | ரேூட்டு | ஷை | சுகதான் சிங்கோ | 0 | 0 | 0·9 |

பிரதமபடம் A 479. கிராமம்—கலுஅக்கல.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | பள்ளியவத்த | வெறுங்காணி | ஹிஸ்கிறேஸ்த ஆச்பிசொப், கொழும்பு | 0 | 0 | 0 2 |
| 2 | ஷை | ஷை | ஷை | 0 | 0 | 2 |
| 3 | ஷை | ஷை | ஷை | 0 | 0 | 0·7 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனுல் அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1935 ம் ௵ (ஒகஸ்றட்) ஆவணி மாசம் 2 ௳ தேதியிலன்று காலை 10 மணிக்கு இக்கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1935 ம் ௵ ஆனிமீ 18 ௳.

ஏ. ஆர். மெக்டொனல்
மேலதி உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் இங்கிரியை ஆஸ்பத்திரியின் சமீபம் கிணறு ஒன்று தோண்டும்படியாக என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது:—

பிரதமபடத்து இல. A 1,493. குறிச்சி—இங்கிரிய.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | கறவிட்டியாகந்தை பாவலுவத்தை | கல்செட்டிய கிணறு ஒன்றும் 15 ல் இருந்து 20 வருஷம் சென்ற தென்னைமரம் 2 ம் | இங்கிரியை பீ. ஏ. லீனி சிங்கோ | 0 | 0 | 4·1 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்து காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனல் அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1935 ம் ௵ (ஜூலை) ஆடி மாசம் 23 ௳ தேதியிலன்று காலை 10.30 மணிக்கு இங்கிரியை கன்சபாவில் என்முன்பாக வெளிப் பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

களுத்துறைக் கச்சேரி, ஜே. லைற்,
1935 ம் ௵ (ஜூன்) ஆனிமீ 18 ௳. உதவி அரசாட்சி ஏசண்டு, களுத்துறை.

---

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் தம்புக்பிட்டியாவில் ஓர் பாடசாலைக்கு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது:—

பிரதமபடத்து இல. A 286. குறிச்சி—பள்ளதம்புக்பிட்டியாபஸ்பாகெ கோறளை
உடபுலத்கம, கண்டி டிஸ்திறிக், மத்திய மாகாணம்.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 1 | அல்தோறவத்த | 30 வயசுள்ள தேயிலை, 40 வயசுள்ள 1 பலாமரமும், 20 வயசுள்ள 1 மாமரமும், 1 கமுகமரமும், 1 கட்டடமுமுண்டு | ஏச். ஒ. லெவ்வை, பலாங்தோட்டைகுறுப், நாவலப்பிட்டி | 2 1 14·3 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனல் அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1935 ம் ௵ (ஜூலை) ஆடி மாசம் 15 ௳ தேதியிலன்று பிறபகல் 2.30 மணிக்கு தம்புகபிட்டி பாடசாலையில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமகு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுககாய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனல் அவர்களிடத்திற கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கண்டிக் கச்சேரி, டீ. சீ. ஆர். குணவர்தன,
1935 ம் ௵ (ஜூன்) ஆனிமீ 11 ௳. உதவி அரசாட்சி ஏசண்டு, கண்டி.

---

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் சம்மாந்துறைப்பற்றில் வரிப்பத்தான் சேனையில் ஒரு கலவன் பாடசாலை கட்டுவதற்கு என்னும் பகிரங்கதேவைகு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும காணிகளை, அஃதாவது:—

பிரதமபடத்து இல A 205. குறிச்சி—வரிப்பத்தான்சேனை.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 2 | பள்ளியடிவளவு | வெண்நிலம் | எம். அகமது லெப்பை, வரிப்பத்தான்சேனை | 0 0 8·4 |
| 3 | தோடையடிவளவு | 12 வயதுள்ள ஒரு தோடைமரமும், ஒரு குடிசையுமுள்ள தோட்டம் | அகமது லெப்பை மரியான் கண்டு, வரிப்பத்தான்சேனை | 0 0 11·8 |
| 4 | புளியடிவளவு | ஒரு குடிசையும், வாழைமரங்களுமுள்ள தோட்டம் | சுலைமாண்கண்டு ஆதம்பாவா, வரிப்பத்தான்சேனை | 0 0 18·2 |
| 6 | ஷை | வெண்நிலம் | எம். அகமது லெப்பை, வரிப்பத்தான்சேனை | 0 0 16·8 |
| 7 | பள்ளியடிவளவு | 5 வயதுள்ள எலுமிச்சை மரமும், ஒரு குடிசையுமுள்ள தோட்டம் | ஐ. சீனித்தம்பி, கைம்பெண், கவ்வக்குட்டி, வரிப்பத்தான் சேனை | 0 0 17·1 |
| 8 | ஷை | ஷை | ஷை | 0 0 3·6 |
| 9 | புளியடிவளவு | ஷை | எம். அகமதுலெப்பை, வரிப்பத்தான்சேனை | 0 0 3 |

எடுத்துககொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனல் அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1935ம் ௵ (ஜூலை) ஆடி மாசம் 25 ௳ தேதியிலன்று காலை 10 மணிக்கு இறக்காமம் தங்குமடத்தில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அககாணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மட்டக்களப்பு கச்சேரி, சீ. சிற்றம்பலம்,
1935 ம் ௵ (ஜூன்) ஆனிமீ 11 ௳. மட்டக்களப்பு உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் நாச்சடுவாவின் 1 ம் இலக்கமுள்ள கீழ்மட்ட D. வாய்க்காலுக்கென ஒதுக்கப்படும் பூமி என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணிகளை, அஃதாவது:—

I. S. P. பிரதமபடத்து இல. 1. குறிச்சி—கொலுமரதங்குளம்.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 69 | — | சொந்தக்காரனின் வாய்க்கால் | எம். மீராசாய்பு, பீஸ் ஒபிசர், நாச்சடுவா | 0 0 17·4 |
| 69A | — | ஷை | நாகூராண் அகமது, நாச்சடுவா | 0 0 1·5 |
| 69B | — | ஷை | எம். மீராசாய்பு, பீஸ் ஒபிசர், நாச்சடுவா | 0 0 13 |
| 70I | அக்கறெயிடாங். | நெற்காணி | இ. முகைதீன், குசாவ | 0 0 16·6 |
| 70J | சொந்தக்காரனின் வாய்க்கால் | வாய்க்கால் | எம். மீராசாய்பு, பீஸ் ஒபிசர், நாச்சடுவா | 0 0 25·4 |

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 70K | அக்கறெயிடாங் .. | நெற்காணி .. | எம். மீராசாய்பு, பீஸ் ஒபிசர், நாச்சடுவா .. | 0 3 3·8 |
| 70L | ஷை .. | ஷை .. | ஷை .. .. | 0 1 2·6 |
| 70M | ஷை .. | ஷை .. | நாகூரான் அசமது, நாச்சடுவா .. | 0 0 10·2 |
| 70N | ஷை .. | ஷை .. | ஷை .. .. | 0 0 4·5 |
| 70O | ஷை .. | ஷை .. | எம். மீராசாய்பு, பீஸ் ஒபிசர், நாச்சடுவா .. | 0 0 35·9 |
| 70P | ஷை .. | ஷை .. | ஷை .. .. | 0 0 12·7 |
| 70Q | ஷை .. | ஷை .. | மீ. நாகூா உம்மா, குசாவை .. | 0 0 18·8 |
| | | | | 2 0 2·4 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஹூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1935 ம் ஹூ (ஜூலை) ஆடி மாசம் 16 ந் தேதியிலன்று 10 மணிக்கு நாச்சடுவா பாடசாலையில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

அநுராதபுரம் கச்சேரி,
1935 ம் ஹூ (மே) வைகாசிமீ 30 ந் உ.

எல். எல். ஹூன்றர்,
வ. ம. மா. அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஹூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் நாச்சடுவாக் குளத்தின் ஓர் வாய்க்கால் என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது:—

I. S. P. பிரதமபடத்து இல. 1. குறிச்சி.—கொலுமரதங்குளம்.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 70R | அக்கறெயிடாங் .. | உயர்ந்த காடு .. | அ. முகம்மது காசிம், கொலுமரதங்குளம் | 2 1 35·6 |
| 70A | அக்கறேகொலாகெபிமா | பாண் வளவும் வாய்க்காலும் | ஷை .. .. | 0 3 22 |
| 70H | அக்கறெயிடாங் .. | சேனை .. | ஷை .. .. | 0 1 9 |
| | | | | 3 2 26·6 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஹூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1935 ம் ஹூ (ஜூலை) ஆடி மாசம் 16 ந் தேதியிலன்று 10 மணிக்கு நாச்சடுவா பாடசாலையில் என்முன்பாகவெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

அநுராதபுரம் கச்சேரி,
1935 ம் ஹூ (மே) வைகாசிமீ 30 ந் உ.

எல். எல். ஹூன்றர்,
வ. ம. மா. அரசாட்சி ஏசண்டு.

---

## சுப்பிறீங் கோட் அறிவித்தல்.

இலங்கைத்தீவிற் சங்கைபோந்த சுப்பிறீங் கோட்டாரது கட்டளையின்படி நாம் பிரசித்தப்படுத்துவதாவது: கல்ஸ்டோப் நியாயஸ்தலத்திலே மேற்சொல்லிய சுப்பிறீங் கோட்டாரால் இரத்தினபுரி டிஸ்திறிக்டைச்சேர்ந்த கிறிமினெல் வழக்கு விசாரணை, 1935 ம் ஆண்டு ஆடி மாதம் 10 ந் திகதியாகிய புதன்கிழமை காலமே 11 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும்.—ஆதலால் அவ்விசாரணையிற் காரியகருமமுள்ளவர்களெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக் கடவர்கள்.

இங்ஙனம்,
ஏ. ஆர். ஹெலொக்,
பிஸ்காலுக்காக, சப்பிரகமுவா.

இரத்தினபுரி பிஸ்கால் கந்தோர்,
1935 ம் ஹூ ஆனிமீ 10 ந் உ.

---

## உத்தியோக சம்பந்தமில்லாதவர்களின் அறிவித்தல்கள்.

இதன்கீழ் கையொப்பம்வைக்கும் இரத்தினபுரி டிஸ்திறிக், குருவிட்டி கோறளை உடபத்துப்பவையில் மல்வலையில் இருக்கும், குட்டிகந்தெ விதானெலாயே புஞ்சிமஹத்மயா வாகிய நான், 1907 ம் ஆண்டு 1 ம் நிம்பர் நொத்தாறிஸ் சட்டத்தின், செடேல் 1 B. 2 வது பிரிவின் பிரகாரம் இன்று தொட்டு மூன்று மாசம் சென்றதின்பின் இரத்தினப்புரி டிஸ்திறிக்கில், சிங்கள பாஷையில் பிரசித்த நொத்தாரிசாக வேலைபார்க்க பதிவுத்தலைவருக்கு விண்ணப்பஞ்செய்ய நான் எண்ணியிருக்கிறேனென்று இத்தால் அறிவிக்கிறேன்.

கே. வீ. புஞ்சிமஹத்மயா.

மல்வலை,
1935 ம் ஹூ மேமீ 13 ந் உ.

---

காலி டிஸ்திறிக்கில் கங்கபடடத்துவல் கொதேவலையில் வசிக்கும் கங்கானம்கமகே ஜோன் பீடர் அபயசிரிவர்தன ஆகிய நான் 1907 ம் ஆண்டு முதலாம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின் 1B என்னும் செடுலினது 2 ம் செக்சன்படி சிலாப டிஸ்திறிக்கில் சிங்களப் பாஷையில் பிரசித்த நொததாரிஸ்ஆக வேலைபார்ப்பதற்கு இற்றைக்கு மூன்று மாசத்தின்பின் றெஜிஸ்ரார் ஜனறல் அவர்களிடம் உத்தரவு கேட்பேன் என்று இத்தால் அறிவித்தல் கொடுக்கின்றேன்.

கே. டீ. பீ. அபயசிரிவர்தன.

1935 ஹூ வைகாசிமீ 12 ந் உ.

---